**Starting time 11.52 A.M.**

# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR

**O.S. No. 81/2008**

Deposition of **D.W.2** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr.III Bench Clerk of this court, on 24.11.2022 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : பெருமாள் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை** : முத்தாகவுண்டனூர் கிராமத்தில் ஆறுமுக கவுண்டர் என்பவர் ஊர் கவுண்டராக இருந்தார் என்றால், சரியல்ல. ஆறுமுக கவுண்டர் காலத்திற்கு பின்னர் அவரது மகன் நடேச கவுண்டர் என்பவர் ஊர் கவுண்டராக இருந்தார் என்றால், ஆறுமுக கவுண்டர் என்பவர் எனது பெரியப்பா, எங்கள் வகையறாவில் 4, 5 பேர் உள்ளோம், அவர்களில் நால்வருமே ஊரில் பிரச்சனை என்றால், பைசல் செய்வார்கள். தற்போது நடேச கவுண்டரின் மகன் மோகன் என்பவர் ஊர் கவுண்டராக உள்ளார் என்றால், சரிதான்.

2. ஊர் வழக்கப்படி, ஊர்க் கவுண்டர் குடும்பத்தில் மூத்தவர் கோவில் திருவிழாக்களை முன் நின்று நடத்துவார்கள் என்றால், சரிதான். அந்த வகையில் ஏற்கனவே ஆறுமுக கவுண்டரும், அவரது மகன் நடேசனும், நடேசனுக்கு பின் அவரது மகன் மோகனும் ஊர்க்கவுண்டராக செயல்பட்டு வருவதால் நான் ஊரில் உள்ள விவகாரங்களில் தலையிடுவதில்லை என்றால், சரியல்ல. வாதி கணேசனும், பிரதிவாதிகளும் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள், ஒரே சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்

என்றால், சரிதான். வாதி மற்றும் பிரதிவாதிகள் நிலத்தின் சர்வே எண் தெரியுமா என்றால், தெரியாது. எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள கிணறு மற்றும் மின் இணைப்பில் பாதி பாகத்தை வாதி கணேசன், பாக்கியம் வகையறாவிடம் இருந்து வாங்கியுள்ளார் என்றால், சரிதான்.

3. பொது கிணற்றுக்கு கிழக்கு பக்கத்தில் புதியதாக வேறு நிலங்களை வாங்கியுள்ளார்கள் என்றால், சரிதான். அந்த நிலத்தில் ஒரு பகுதியை பிரதிவாதிகள் விற்றுவிட்டார்கள், மற்றொரு பங்கு பிரதிவாதிகள் அனுபவத்தில் உள்ளது என்றால், சரிதான். மின் இணைப்பு சம்மந்தமாக பைசல் நடந்ததாகவும், அப்போது ஆவணம் எழுதப்பட்ட சமயத்தில் நானும் மற்றவர்களும் உடனிருந்ததாக சொல்வது பொய் என்றால், சரியல்ல. அந்த சமயத்தில் 2 ஆவணங்கள் எழுதி ஒன்று கணேசனிடமும், மற்றொன்று பிரதிவாதிகளிடமும் கொடுக்கப்பட்டது என்று சொல்வது தவறு என்றால், சரியல்ல.

4. வாதி கணேசன் தாவா மின் இனைப்பில் அவருக்குண்டான பாதி பாகத்தை விட்டுக் கொடுப்பதற்காக பிரதிவாதிகளிடம் இருந்து ரூ.1,500/- பணத்தை பெற்றுக் கொண்டதாக சொல்வது தவறு என்றால், சரியல்ல. பிரதிவாதிகள் சொல்வதுபோல், வாதி கிணறு மற்றும் மின் இணைப்பை விட்டுக் கொடுக்கவும் இல்லை, பணத்தையும் பெற்றுக் கொள்ளவும் இல்லை என்றால், சரியல்ல. பொது கிணறு மற்றும் மின் இணைப்பின் பாதி பாகத்தையும், புதியதாக வாங்கிய மின் இணைப்பை முழுவதுமாகவும் வாதி கணேசன் அனுபவித்து வருகிறார் என்றால், சரியல்ல.

5. வாதிக்கு சொந்தமான சொத்துக்களை அபகரிக்கவேண்டி பிரதிவாதிகள் முயற்சித்தார்கள் என்றும், அவர்களுக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. பிரதிவாதிகள் அழைத்ததன் பேரில்தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால், சரிதான். வழக்கு தாக்கல் செய்யாமல் இருந்திருந்தால், வாதியின் சொத்தை பிரதிவாதிகள் அபகரித்திருப்பார்கள் என்றும், பிரதிவாதிகளுக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

பிரதிவாதிகள் தரப்பில் மறு விசாரணை இல்லை.

Ending Time: 12.06 P.M.

**ஒப்பம்/- ஜி. யுவராஜ்**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**